www.Padasalai.Net www.CBSEtips.in

FTM

# காலாண்டுத் தேர்வு – 2023

**11** - ஆம் வகுப்பு

பொதுத்தமிழ்

காலம் : 3.00 மணி

மதுரை – 15.09.23

மதிப்பெண்கள் : 90

## பகுதி – I

குறிப்பு : **I.** அனைத்து வினாக்களுக்கும் விடை தருக..

**II.** கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவேண்டும்.

14 x 1 = 14

1. "கபாடபுரங்களைக் காவுகொண்டபின்னும் காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்" அடிமோனையைத் தெரிவு செய்க.

அ. கபாடபுரங்களை - காவுகொண்ட ஆ. காலத்தால் - கனிமங்கள்
இ. கபாடபுரங்களை - காலத்தால் ஈ காலத்தால் - சாகாத

2. "வானம் பொய்த்தது" - என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைபொருள் ................ .

அ. வானம் இடிந்தது ஆ. மழை பெய்யவில்லை
இ.மின்னல் வெட்டியது ஈ. வானம் என்பது பொய்யானது.

3. நல்ல என்னும் அடைமொழி பெற்ற நூல் ...................... .

அ. நற்றிணை ஆ. நல்வழி இ.குறுந்தொகை ஈ. ஐங்குறுநூறு

4. சின்னச்சீறா என்ற நூலின் ஆசிரியர் ......................... .

அ. அபுல்காசிம் மரைக்காயர் ஆ. உமறுப்புலவர்
இ. பனுஅகமது மரைக்காயர் ஈ. கடிகை முத்துப்புலவர்.

5. வாடிவாசல் எனும் குறும்புதினத்தின் ஆசிரியர்?

அ.சி.சு.செல்லப்பா ஆ.ஜெயமோகன்
இ. அ.முத்துலிங்கம் ஈ.ரா.அ.பத்மநாபன்

Greentamil.in

6. ஏடு சுவடி பொத்தகம் பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ............... என்பதாகும்.

அ. நூல் ஆ. ஓலை இ. எழுத்தாணி ஈ. தாள்.

7. மலை என்ற திராவிட மொழிச் சொல் சமஸ்கிருதத்தில் எவ்வாறு கூறப்படுகிறது?

அ. மல ஆ. மலா இ. மலய ஈ. மலே

8. கருப்பட்டி பனங்கற்கண்டு போன்றவை .................... .

1. மதிப்பு கூட்டுப்பொருள் 2. நேரடி பொருள்

அ. 1மட்டும் சரி ஆ. 2 மட்டும் சரி
இ. இரண்டும் சரி ஈ. 1 தவறு 2 சரி.

9. ஜெயமோகனின் நாவல் எது?

அ. அறம் ஆ. விஷ்ணுபுரம் இ. நெரிக்கட்டு ஈ. தகப்பன் கொடி

10. மொழிக்கு முதலில் வராத எழுத்து

அ. ஆயுத எழுத்து ஆ. சார்பெழுத்து இ. உயிர் ஈ. உயிர்மெய்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

11. கருங்கடல் என்னும் சொல்லிற்குரிய புணர்ச்சி விதிகளைத் தேர்வு செய்க.

அ. ஈறுபோதல் தன்னொற்றிரட்டல் ஆ. ஈறுபோதல் இனமிகல்
இ. ஈறுபோதல் ஆதிநீடல் ஈ. ஈறுபோதல் இணையவும்.

12. பகுபத உறுப்புகளுள் இடம் பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?

அ. பகுதி விகுதி இடைநிலை சந்தி சாரியை விகாரம்
ஆ. பகுதி இடைநிலை சாரியை
இ. பகுதி சந்தி விகாரம் ஈ. பகுதி விகுதி

13. 'Ethnic Group' - கலைச்சொல் தருக.

அ. இனக்குழு ஆ. முன்னொட்டு இ. பின்னொட்டு ஈ. புவிச்சூழல்

14. 'வெண்சுவை' - இலக்கணக்குறிப்பு தருக.

அ. பெயரெச்சம் ஆ. வினையெச்சம்
இ. பண்புத்தொகை ஈ. எண்ணும்மை

## பகுதி - II பிரிவு - 1

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடைதருக.**
**எவையேனும் மூன்றனுக்கு விடையளி.** 3 x 2 = 6

15. இனம் மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
16. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?
17. எட்டுத்தொகை நூல்கள் யாவை?

Greentamil.in

18. ஒலி ஒளி பற்றி நீலகேசி தரும் அறிவியல் செய்தி யாது?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடையளி.** **2 x 2 = 4**

19. பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?
20. உ.வே.ச.அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.
21. சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?

## பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7 x 2 = 14**

22. **பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்துக.** வாடகை, மாதம்.
23. **தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.**
ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்.
24. குரை, குறை - **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**
25. கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர் - **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

26. அறிவில்லாதவன் - **சொல்லைப்பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.**
27. **வேர்ச் சொற்களை தொடர்களாக மாற்றுக** - ஓடு, பாடு.
28. புலனறிவு - **புணர்ச்சிவிதி தருக.**
29. உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?
30. **விடைக்கேற்ற வினா அமைத்தல்.** வழக்கறிஞராகத் தொழில் புரிவதை விடத் தமிழின்பத்தில் திளைப்பதையே டி.கே.சி விரும்பினார்.

## பகுதி - III பிரிவு -1

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.** **2 x 4 = 8**
**<u>ஏவையேனும்</u> இரண்டனுக்கு விடையளி.**

31. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?
32. சங்ககாலத்தில் நடைபெற்ற சமூக நிகழ்வு வெள்ளிவீதியார் பாடலில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. இக்காலச் சமூக நிகழ்வுகள் எழுத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையை ஒப்பிட்டு விளக்கு.
33. "ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்" - **இடம் சுட்டிப் பொருள் விளக்குக.**
34. இன்னும் எவற்றிற்கெல்லாம் விஞ்ஞானம் வழிவகுக்குமென மீரா கூறுகிறார்?

**பிரிவு - 2 <u>எவையேனும்</u> இரண்டனுக்கு விடையளி.** **2 x 4 = 8**

35. 'என்னுயிர் தமிழ் மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக.
36. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.
37. சங்ககாலத் தமிழர்களின் வானியல் அறிவினை முதுகண்ணனார் பாடல்வழிப் புலப்படுத்துக.
38. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் - குறித்து வரைக.

## பிரிவு - 3

39. வேற்றுமை அணி சான்று தந்து விளக்கு. ***(அல்லது)*** **3 x 4 = 12**
"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.
40. பாடாண்திணை ***(அல்லது)*** பருவம் குறித்துப் பிரிந்த தலைமகன் அப்பருவத்திற்கு முன்னே வந்தமை தோன்றத் தலைவிக்கு உரைத்தது துறையைச் சான்று தந்து விளக்கு
41. **மையக்கருத்தை கூறி ஏற்புடைய நயங்கள் மூன்றை எழுதுக.**

*பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி*
*பேணி வளர்த்திடும் ஈசன்*
*மண்ணுக்குள்ளே சிலமூடர்*
*மாதர் அறிவைக் கெடுத்தார்*
*கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி*
*காட்சிக் கெடுத்திட லாமோ?*
*பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்*
*பேதமை யாற்றிடும் காணீர்* - பாரதியார்

Greentamil.in



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

42. தமிழாக்கம் தருக.

1. Education is the most powerful weapon which you can use to change the world.
2. Looking at beauty in the world is the first step of purifying the mind.
3. Culture does not make people. People make culture.
4. A people without the knowledge of their past history and culture is like a tree without roots.

Greentamil.in - 97861 41410

**காது கேளாதவர்களுக்கான மாற்று வினா. கீழ்க்காணும் பத்தியைப் படித்து நான்கு வினாக்களை உருவாக்குக.**

'தமிழ்' என்ற சொல் தமிழருக்கு இனிமையானது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. 'தமிழ்' என்ற சொல்லை இனிமை பண்பாடு அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர். "அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்" என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' என்னும் சொல் மொழி கவிதை என்பவற்றைத் தாண்டிப் 'பல்கலைப் புலமை' என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. கம்பன் "தமிழ் தழீஇய சாயலவர்" என்னும் இடத்து 'தமிழ்' என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.

## பகுதி – IV

**3 x 6 = 18**

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் இருபக்கங்களுக்கு மிகாமல் விடையளி.**

43. அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க. ***(அல்லது)***

ஆ) 'கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவுவறிதல் அதிகாரம்வழி நிறுவுக.

44. அ) இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன. - கூற்றினை மெய்ப்பிக்க. ***(அல்லது)***

ஆ) பௌத்தக் கல்வி, சமணக்கல்வி, மரபு வழிக்கல்வி முறைகளால் தமிழகக்கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க

45. அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீங்கள் அறிந்தவற்றை தொகுத்து எழுதுக.

***(அல்லது)*** ஆ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

## பகுதி - V

**V குறிப்பு : அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4+2=6

46. அ) "உண்டால் அம்ம" எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை எழுதுக.

ஆ) 'பெரிது' என முடியும் குறளை எழுதுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com